பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகள்.

*687. வினு.— திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி கல்லூரி ஆசிரியர்கள் சம்பள விகிதம், Service conditions ஆகியவைகள் குறித்து அரசு ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம். 1977 செப்டம்பர் திங்களில் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின் மேல் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பளம் நேரடியாக அரசே தருகிற விதத்தில் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி பரிசிலிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கொள்கையளவில் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதும் அன்றையதினம் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு அளித்த அந்த ஊதிய விகிதத்தை அரசு ஏற்றுக்கொண்டு கல்லூரி ஆசிரியர்களோடு ஒரு உடன்பாடு ஏற்கனவே ஏற்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், இன்னும் கூட தனியார் கல்லூரிகளுக்கு அந்த திட்டத்தை நிறைவேற்ற அறிவிப்புகள் வந்ததாகத் தெரியவில்லை. எனவே, எவ்வளவு விரைவில் அதை நிறைவேற்ற அரசு முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, விரைவிலே அந்த உடன்பாட்டிலே கண்டுள்ள, அறிக்கையிலே கண்டுள்ள செய்திகள்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய பரிந்துரைப்படி, கல்லூரி ஆசிரியர்களுடைய சம்பள விகிதங்கள் மாற்றப்பட்டிருப்பதாக

1978 மார்ச் 28]

அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாற்றியமைக்கப்பட்ட சம்பள விகிதமும் இதற்கு முன்னல் வாங்கிய ஊதியத்துக்கும் அதிக உயர்வில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதே நேரத்தில் ஊதிய உயர்வைக் கொடுப்பதன் மூலமாக ரூ. 5 கோடிவரை செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? இப்பொழுது வாங்கிக்கொண்டு வரும் சம்பளமும், அதிகமாக கொடுப்பதாகச் சொல்கிற சம்பளமும் இரண்டும் ஒரே மாதிரியாக, வித்தியாசம் இல்லாமலிருப்பது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நீண்ட நாள் பணியிலே இருப்பவர்களுக்கு அந்த வித்தியாசம் குறைவாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, 1976-ம் ஆண்டில் ஏற்பட்ட தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் செக்ஷன் 38(1), செக்ஷன் 21-ன் படி பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அப்பீல் செய்துக்கொள்வதற்கு டிரிபியூனல் கான்ஸ்டிடுயூட் செய்ய வேண்டியது அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனல் இதுவரை அந்த டிரிபியூனல் போடப்படவில்லையென்று நான் அறிகிறேன். அதற்கான காரணம் என்ன? அந்த டிரிபியூனலை உடனடியாகப் போட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக்குழு எத்தனை சிபாரிசுகளை பரிந்துரை செய்தது? அவைகளில், நம்முடைய அரசு எத்தனை ஏற்றுக்கொண்டது? எத்தனை நிராகரிக்கப்பட்டன? எத்தனை இன்னும் பரிசீலனையில் உள்ளன என்பதையும் அகில இந்திய அளவில் மற்ற பல்கலைக் கழக ஆசிரியர்கள் பெறுகின்ற சம்பளமும் இங்கே உள்ள பல்கலைக் கழக ஆசிரியர்கள் பெறுகின்ற சம்பளமும் ஒன்ருக இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பல்கலைக்கழக மானியக் குழு சிபாரிசு செய்த சம்பள விகிதத்தை நாம் இன்றையதினம் அமுல் நடத்தியிருக்கிறோம். கல்லூரி ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளோடு நாம் பேச்சுவார்த்தை நடத்தி, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேதான் இன்றைய தினம் அமுல் நடத்தப்பட்டிருக்கிறது. வேறு மாநிலங்களிலே இன்னும் அமுல் நடத்தப்படவில்லையென்ற நிலைமைகளும் இருந்து கொண்டிருக்கின்றன.